**தேதி :** 05.03.2026 **SC.No. :** 79/2023 PW :3 சாகுல் ஹமீது

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வாகன சோதனையை சுமார் ஒரு மணி நேரம் நடத்தினோம். சார்பு ஆய்வாளர் என்னுடன் இருந்தார் என்றால் சரிதான். வாகன சோதனை செய்த இடம் பள்ளியின் வடபுறம் என்றால் சரிதான். பள்ளியின் வாசலுக்கு வடக்கு பக்கம் என்றால் சரிதான். எதிரி பள்ளியின் வாசலுக்கு முன்பு வண்டியை நிறுத்தி பள்ளி மாணாக்கர்களுக்கு புகையிலை பொருட்களை விற்பனை செய்ததாக துலங்காது என்றால் சரிதான். எதிரியின் வாகனம் செங்கோட்டையிலிருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். நாங்கள் வாகன சோதனை செய்யாமல் இருந்திருந்தால் எதிரியின் வாகனமானது கேரளா நோக்கி சென்றிருக்கும் என்றால் எனக்கு தெரியாது. அன்றைய தினம் பள்ளிக்கு எதனால் விடுமுறை என்றால் அது எனக்கு தெரியாது. பள்ளி விடுமுறை தினம் என்பதினால் அந்த பகுதிக்கு பள்ளி மாணவர்கள் வர வாய்ப்பில்லை என்றால் சரிதான். வாகனச்சோதனையை நாங்கள் வீடியோ பதிவு செய்தோமா? என்றால் இல்லை. சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பார்வை மகஜரில் நான் கையெழுத்து செய்தேன். மாதிரி வரைபடம் வரைந்தார்களா? என்றால் உதவி ஆய்வாளர் தயார் செய்தார். எதிரி ஓட்டி வந்ததாக சொல்லப்படும் வாகனம் யாருடைய வாகனம் என்றும், அந்த வாகனத்தின் உரிமையாளர் யார் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்தின் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து விட்டு தான் நாங்கள் வாகனசோதனை செய்தோம். எதிரி புகையிலை பொருட்கள் எதையும் கொண்டு வரவில்லை என்றாலும், எதிரி வாகனத்தை ஓட்டி

வரும் போது நாங்கள் கைகாட்டியும் நிற்காமல் சென்றதினால் எதிரியை பழிவாங்க வேண்டி  பொய் வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:40:23 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 79/2023**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஞானரூபி பரிமளா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | அல்போன்ஸ் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 32 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.09.2020ம் தேதி, 14.00 மணிக்கு புளியரை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது நானும், முதல்நிலைக்காவலர்கள் முகமது இஸ்மாயில், இசக்கி, 2ம்நிலைக் காவலர் சாகுல்ஹமீது ஆகியோர்கள் புளியரை அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் மெயின்ரோட்டில் வாகனத்தணிக்கை செய்து கொண்டிருக்கும் போது, TN-76-AB-2017 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலேண்ட் தோஸ்த் வாகனத்தை நிறுத்தி தணிக்கை செய்தபோது, அதில் அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை அத்தாட்சி மூலம் கைப்பற்றி, மேற்படி வாகனம் மற்றும் எதிரிகள் சகிதம் நிலையம் 15.00 மணிக்கு வந்து நிலையக்குற்ற எண்.241/2020, சட்டப்பிரிவுகள் 6(பி), 24(1) COTPA Act ஆக வழக்கு பதிவு செய்து, முதல்தகவல்அறிக்கை தயார் செய்தேன். அதன் அசல் நகல்களை செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும்,

மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகும். முதல்தகவல்அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

எதிரி ஓட்டி வந்த வாகனம் எந்தச் திசையிலிருந்து எந்த திசையை நோக்கி வந்தது என்றால் செங்கோட்டையிலிருந்து புளியறை நோக்கி வந்தது. அது கேரளா நோக்கி போகக்கூடிய வாகனம் என்றால் எனக்கு தெரியாது. அந்த வாகனத்தின் உரிமையாளர் யாரென்று எனக்கு தெரியாது. வாகனச்சோதனை ஒரு மணி நேரம் நடந்தது. 14.00 மணியிலிருந்து 15.00 மணி வரை நடந்தது. வாகனச்சோதனையை வீடியோ பதிவு செய்யவில்லை. சம்பவம் நடந்த இடம் புளியறை பள்ளிக்கூடம் என்றால் சரிதான். காவல்நிலையத்திலிருந்து சம்பவயிடம் 50 மீட்டர் தூரத்தில் உள்ளது. முதல்தகவல்அறிக்கையில் அரை கி.மீ தூரம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

அன்றைய தினம் பள்ளி, கல்லூரிகள் திறக்கவில்லை என்றாலும், அது கொரொனா காலக்கட்டம் என்றால் சரிதான். எதிரி அந்த பொருட்களை யாருக்கு விற்றார் என்று நான் பார்க்கவில்லை. நான் வாகனச்சோதனை செய்தது பொதுநாட்குறிப்பில் பதிவிருக்கும் என்றால் சரிதான். நான் பொதுநாட்குறிப்பு பதிவேட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சாக்கு மூட்டையை பிரித்து பார்த்தேனா? என்றால் பார்த்தேன். முதல்தகவல்அறிக்கை 9 வது காலத்தில் வாகனத்தையும், தேங்காயையும் கைப்பற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி மீது முன்வழக்குகள் உள்ளதா? என்றால் எனக்கு

தெரியாது. எதிரிக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிபரக்கணக்கிற்காக வேண்டி எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:40:34 +0530